# ஏல் - ஓர் - எம் - பாவாய்

**பேராசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்**
**முன்னாள் ஆய்வுப் பேராசிரியர்,**
**கக்சுயின் பல்கலைக் கழகம், தோக்கியோ, ஜப்பான்.**

மார்கழி மாதம் மழை பொழியத் தொடங்கி விட்டது. கொட்டும் மழையும் குளிரும் மாரிகாலத்தைக் காட்டி நிற்கின்றன. மனிதர் வாழ்க்கையில் மழையால் வளம் பெருகும். மழை உரிய காலத்தில் பொழியாவிட்டால் எல்லா உயிரினங்களும் இடர்ப்பட நேரிடும். எனவே மழையை வேண்டி இயற்கையை பணிந்து மனிதன் வழிபட மார்கழி நீராடல் வழிபாட்டு நடைமுறையாயிற்று. பெண்கள் பண்டுதொட்டு மார்கழி நீராடல் செய்வது ஒரு வழக்கமாக இருந்தது என்பதைப் பழைய தமிழ் இலக்கியங்கள் விரிவாய் விளக்கவில்லை. சங்க காலப் பாடல்கள் சிலவற்றில் சில குறிப்புகளே காணப்படுகின்றன. தைநீராடல், அம்பா ஆடல் எனக் குறிப்பிடப்படும் நீராடல் முறைகள்தான் பின்னர் மார்கழி நீராடலாக அமைந்தது எனக் கருதப்படுகின்றது.

முதன்முதலில் இந்த மார்கழி நீராடல் பற்றிய நடை முறையை ஆவணப்படுத்திய பெருமை ஆண்டாளைச் சாரும். ஆண்டாள், தான் பாடிய திருப்பாவையில் முப்பது பாடல்களிலே இந் நடைமுறையினை விளக்கியுள்ளார். பாடல்களின் இறுதித் தொடர் அமைப்பு அவருடைய நோக்கத்தைச் சுட்டிநிற்கின்றது. “ஏலோரெம்பாவாய்” என்னும் இத்தொடர் ஆண்டாளின் கூர்மையான அறிவைக் காட்டி நிற்கின்றது. வழிபாட்டு நடைமுறை ஒன்றை வருங்காலத்தவர்க்கு ஆண்டாள் பயிற்ற எண்ணி உள்ளார். மனித வாழ்வியலிற் கலந்திருந்த ஒரு வழிபாட்டு நடைமுறையையும் அதன் நோக்கத்தையும் ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்கள் தெளிவாக விளக்கியுள்ளன. எனினும் ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களை பாவைப்பாட்டு எனக்கொண்டு அக்காலப் பாமர மக்களுடைய நாட்டுப் பாடலெனக் கருதுவோரும் உளர். ஆனால் ஆண்டாள் தன்னுடைய காலத்து வழிபாட்டு நடைமுறை ஒன்றினை நம்பிக்கையோடு கடைப்பிடித்தவர். கண்ணனையே தனது கணவர் ஆக எண்ணி அவனை அடைய வேண்டி மார்கழி நோன்பு நோற்றவர். நோன்பு நோற்கும் பெண்கள் ஒருவரையொருவர் வீடு வீடாகச் சென்று துயிலெழுப்பி விடிகாலையிலே நீராடச் செல்லும் வழக்கத்தை மனிதர்கள் எல்லோரும் கடைப்பிடிப்பது நன்று என ஆண்டாள் எண்ணியுள்ளாள். அதனால் அவ்வாறு பெண்களைத் துயிலெழுப்பும்போது பரிமாறப்படும் செய்திகளைப் பாடல் வடிவில் அமைத்துள்ளார். பாடலின் இறுதித் தொடரில் ஏல்-ஓர்- எம் - பாவாய் எனப் பிரிந்து அமைவது ஒரு நல்ல கருத்துப்பரிமாற்ற முறைமையைக் காட்டுகின்றது. ஏல் - ஏற்றுக் கொள் - ஓர் - எண்ணிப்பார், எம் - எம்மைச் சார்ந்த, பாவாய் - பெண்ணே. “நான் கூறும் இக்கருத்துக்களை நீ ஏற்று, அதாவது செவியிலே ஏற்று, எண்ணிப் பார்த்துப் பின் முடிவு செய். எம் கூட்டத்தைச் சேர்ந்த பெண்ணாக இருந்தாலும் நீ கருத்து வேறுபாட்டைக் கொண்டிருக்கலாம். எனவே உன் குழப்ப நிலையிலிருந்து தெளிவுபெற வேண்டி நாம் உணர்ந்தவற்றை உனக்குக் கூறுகின்றோம்” என்றே ஆண்டாள் விளக்கந் தந்துள்ளார்.

இன்று திருப்பாவைப் பாடல்கள் சம்பிரதாய முறைப்படி பாடப்படுகின்றன. மார்கழி மாதத்தில் வைணவ ஆலயங்களிலே ஓதப்படுகின்றன. முப்பது பாடல்களையும் ஓத முடியாவிட்டால் “சிற்றஞ் சிறுகாலை” என்னும் 29ஆம் பாடலை மட்டும் ஓதினால் நன்று என்று கருதப்படுகின்றது. ஆனால் வழிபாட்டு நடைமுறை என்ற நிலையில் ஆண்டாளின் திருப்பாவையை நாளும் கேட்பதே நல்லது. ஆண்டாள் பாடல்களின் அமைப்பை நோக்கும்போது முதற் பாடலிலேயே சுருக்கமாகத் தன் முழு நோக்கத்தினையும் கூறியிருப்பதனை உணரமுடிகின்றது.

*“மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்நாளால்*
*நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்*
*சீர்மல்கு ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்*
*கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்*
*ஏரார்ந்த கன்னி யசோதை இளஞ்சிங்கம்*
*கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்*
*நாராயணனே நமக்கு பறைதருவான்*
*பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்”*

இப்பாடலில் நோன்புக்கு உரியவர்கள் இளஞ்சிறுமிகள், நோன்புக்கு உரிய காலம் மார்கழி மாதம். நோன்பின் தொடக்க நாள் நிறைநிலவு நாள். நோன்பினால் அடையும் பலன் நாராயணனைச் சேர்தல் என ஆண்டாள் குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் மார்கழி நோன்பின் நோக்கம் நல்ல கணவரைப் பெறுதல் என விளக்கங் கொடுப்பதற்கும் இந்த முதலாவது பாடலே காரணமாயிருந்தது போலும். நெய்யுண்ணாமல் பாலுண்ணாமல் நாட்காலையில் நீராடி மையிட்டு எழுதாமல் மலரிட்டுக் கூந்தல் முடியாமல் செய்யாதன செய்யாமல் தீமைதரும் கோள் சொல்லாமல் அன்னக்கொடை செய்து நோன்பு நோற்றதை ஆண்டாள் பாடியுள்ளார். பெண்களின் வாழ்வியலில் மார்கழி நோன்பு எவ்வாறு இணைந்திருந்ததென்பதைத் திருப்பாவைப் பாடல்கள் தெளிவாக கூறுகின்றன. பெண்மையின் குண இயல்புகளை எல்லோரும் அறியக்கூறி மீண்டும் துயில் எழுப்புகின்றாள். திருப்பாவையின் முப்பது பாடல்களில்